## வெலிமட பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

---------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 04 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, வெலிமட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ஒதுக்கியிருந்த முத்திரை கட்டண கடன்பட்டோர் பெறுமதியினை மிகைத்து மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 278,777 முத்திரை கட்டண வருமானம் திரண்ட நிதியக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 278,777 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 783,313 இற்கான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 690,916 என கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 92,327 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 488 கொடிக் கம்பங்களின் பெறுமதி ரூபா 482,398 தொகையினை கணக்கீடு செய்யாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி அதே தொகையால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 3,269,916 தொகை எனினும், அதனை ரூபா 3,474,236 தொகை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான செலவு மற்றும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 204,320 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 59,061,614 ஆக காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 72,469,113 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 22,817,724 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 | சுற்றுலா அபிவிருத்தி சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தங்குமிடங்களில் இருந்து முன்னைய ஆண்டிற்கான வருமானத்தில் நூற்றிற்கு 01 இனை மிகைக்காத தொகை ஒன்றினை அனுமதிப்பத்திர கட்டணம் என அறவிடப்பட வேண்டும், 05 தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 371 | 1999 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை 24 சந்தர்ப்பங்களில் சபையின் அலுவலர்கள் மற்றும் வெளிசாராருக்கு செலுத்தப்பட்ட ரூபா 686,958 இற்கான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 571 | 558 சந்தர்ப்பங்களில் சபையில் வைப்புச் செய்து 02 வருட காலத்தை கடந்துள்ள ரூபா 3,100,718 இற்கான வைப்புக்களை உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை குடியரசின் தாபனச் கோவை அத்தியாயம் XXIV பிரிவு 4 | சபையில் கடமையாற்றிய இறந்துள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 06 உழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 40,503 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,007,502 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,564,207 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 15,443,295 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை கடன் அறவீடு செய்யும் முன்னேற்றம் பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

2.2.2 வாடகை

-------------

i. சபைக்குச் சொந்தமான 58 மற்றும் 59 ஆம் இலக்க கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை 2011 வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளரினால் செலுத்த வேண்டிய ரூபா 742,092 இற்கான நிலுவை வாடகையை அறவீடு செய்திருக்கவில்லை.

ii. புதிய வர்த்தக தொடர் கட்டடத்தில் கடைகளை வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளர்களினால் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தவறியமையால் 2014 திசெம்பர் அளவில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,055,511 இற்கான நிலுவை வாடகையை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.3 நிதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் | 10,567,073 |
| முத்திரைக் கட்டணம் | 16,007,171 |
| | --------------- |
| | 26,574,244 |
| | ======== |

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 மலசல சாக்கடை செயற்திட்டம்

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 99,205,979 தொகையொன்று செலவிடப்பட்டு உசாத்துணை நிறுவனமொன்றிற்கு ரூபா 16,831,019 தொகை ஒன்று செலுத்தப்பட்டு வெலிமடை நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசல சாக்கடை செயற்திட்டம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2013 ஜனவரி 14 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதும் தொடர்புகள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த 176 அலகுகளில் 2014 திசெம்பர் மாதம் அளவிலும் 10 நுகர்வோர்களுக்கு மாதத்திற்கே தொடர்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அதேபோல செயற்திட்டத்தை அமுல் நடத்தி இணைப்பு வழங்குவதற்கு ஆரம்பிக்கும் போது குறிப்பிட்ட இடங்களில் இணைப்பு குழாய்கள் காணப்படாமையால் செயற்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முடியாதிருந்ததுடன் சில நுகர்வோரகளிடம் அறவிடப்பட்டிருந்த பணத்தையும் திருப்பி செலுத்தியிருந்தது.

(இ) இந்த செயற்திட்டத்திற்கான உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 34,142,123 இற்கான கடன் ஒன்று பெறப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட வட்டியை செலுத்துவதற்கு போதிய வருமானமொன்றின் செயற்திட்டத்தினால் உழைப்பதற்கு முடியாதுள்ளது.

3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

--------------------------------------------------------

பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் எல்லையை சேர்ந்த, முப்பது ஆண்டு அடிப்படையில் குத்தகைக்கு வழங்கியிருந்த காணி தொடர்பாக குத்தகை உடன்படிக்கையின் பிரிவு 1.3 இன் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு குத்தகை தொகையை தீர்மானித்திருக்கவில்லை. அத்துடன் குத்தகை அறவீடு செய்தல் தொடர்பாக தொடர்ச்சியாக கவனயீனமான முறையில் செயற்பட்டுள்ளது. 2011 ஜூலை மற்றும் 2014 மே வரை குத்தகை உடன்படிக்கையின் காலம் முடிவடைந்திருந்த 05 ஆதனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் மற்றும் ஜனாதிபதி செயலாளரின் 2014 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் : எஸ்பீ/ஆர்டீ/02/10 கொண்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

(அ) 2014 நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஹக்கலவத்தையின் கீழ் பிரிவில் சுமார் 50 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக வழங்கியிருந்த ரூபா 50,000 இற்கான தொகை, குறிப்பிட்ட செயற்திட்டம் சாட்டப்பட்ட சங்கத்தினை முறைப்படி செய்விப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் திருப்பி அனுப்பியமையால் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களுக்கு கிடைக்கவிருந்த நலன்கள் சபையின் கவனயீனம் காரணத்தினால் இழக்க நேரிட்டுள்ளது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தொடர்பாடல் டவர்கள் நடத்துதல் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டண அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை காலப்பகுதியில் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 1,700,352 இற்கான சம்பளங்கள் ரூபா 156,500 மந்திரிமார் படி என்பவற்றை மீளளிப்பு செய்திருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(அ) 1993 ஆண்டின் போது ரூபா 138,650 தொகைக் கொள்வனவு செய்திருந்த இலக்கம் 204 – 8982 கொண்ட முச்சக்கர வண்டி

(ஆ) கப்பெட்டிபொல உப அலுவலக வளவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்கள்

i. ஸன்டெக் இன் கை டிரக்டர்

ii. 270 – 0431 கொண்ட டிரக்டர்

iii. டிலெய்லர்

iv. ரொட்டோ மாஸ்டர் கை டிரக்டர் மற்றும் கலப்பை

(இ) கப்பெட்டிபொல உப அலுவலகத்தின் 20’ X 12’ அளவான களஞ்சியக் கட்டடம்

(ஈ) மேல் தெமோதரை காணி

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------------

(அ) சபைக்கு சொந்தமான இலக்கம் 252 – 6331 கொண்ட கப் வண்டி விபத்துக்குள்ளாக்கிய பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் காப்புறுதி கம்பனியில் இருந்து அறவிடப்பட முடியாதுள்ள ரூபா 359,988 தொகையினை விபத்துக்கு பொறுப்பான தலைவரிடம் அறவிடப்பட்டிருக்காததால் சபை நிதியத்திற்கு ரூபா 359,988 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 77,500 பெறுமதியான டெஸ்க்டொப் கணனி ஒன்று மற்றும் மொத்தப் பெறுமதி ரூபா 4,250 ஆகிய 05 மண் வெட்டிகள் என்பன காணாமல் போயுள்ளன.

3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------

வெலிமடை நகரம் பூராகவும் ஒவ்வொரு இடங்களில் குப்பைகள் குவிக்கப்பட்டிருந்தமையால் நகரம் அசுத்தமாக காணப்பட்டதுடன் சுற்றாடல் மாசடைதல் மூலம் பொது மக்கள் சுகாதாரத்திற்கு பாரிய சவால்கள் காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு